# நீரூற்றுப் பாதுகாப்புத் திட்டம்

- நீரூற்றுகள் மலைப்பகுதிகளில் குடிநீருக்கு மிக முக்கியமான ஆதாரங்கள்.

- இவற்றிலிருந்து நீலகிரியில் பெரும்பாலான கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது.

- நீரூற்றுகளில் எவ்வளவு நீர் எந்த காலங்களில் வெளி வருகிறது என்பதை எவரும் தற்போது அளப்பதில்லை.

- நீரூற்றுக்கு நீர் எங்கிருந்து வருகிறது,அந்த இடத்தின் தற்போதைய நிலமை என்ன போன்றவற்றை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

- நீரூற்றுக்கு நிலத்தடி நீரே ஆதாரம். மழைநீர் நிலத்தடி நீராக மாறி நீரூற்றுகளின் மூலமாகவும் கிணறுகுளின் மூலமாகவும் வெளிவருகிறது. ஓடைகளில் வரும் நீரும் மழையில்லாத காலத்தில் நீரூற்றுகளிலிருந்தே வருகிறது.

- நாம் நிலவியல் ஆய்வு மூலம், எந்த இடத்திலிருந்து மழை நீர் நிலத்தடியில் சென்று ஒரு நீரூற்றிலிருந்து வெளிவருகிறது என்பதைக் கணிக்கலாம். அதன்பின் அந்த நிலத்தை சரியான முறையில் பராமரித்தால் அதன் மூலம் நீரூற்றிலிருந்து வரும் நீரின் அளவையும் தன்மையையும் பெருக்கலாம்.

- நிலத்தடி நீரை நன்கு பராமரித்தால் நாம் வருங்காலத்தில் நீர் பற்றாக்குறையில்லாமல் வாழ முடியும்.

- சுகாதாரத்திற்க்கும் நீரின் தன்மைக்கும் தொடர்பு உள்ளது. நீரின் தன்மையை அவ்வப்போது அளக்க வேண்டும். நல்ல சுகாதாரமான பழக்க வழக்கங்களை நாம் கடைபிடித்தால் நீரின் தன்மையும் கூடும், நம்

**ஆரோக்கியமும் கூடும்.**

- **நம்முடைய தற்போதைய தேவைகள் மட்டுமல்லாமல் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய தேவைகளையும் கருதி நாம் ஊற்றுகளின் பராமரிப்பிற்க்கு திட்டமிடவேண்டும்.**

**தொடர்பு கொள்ள தொலைபேசி எண்: 04266-272277, 272977**